பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 10 சனிக்கிழமை 25.12.2021 கதிர் 278

## பல்கலைக்கழக மாணவன் கைது

12 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவரை அவரது கால்களைப் பிடித்து பாலத்திலிருந்து ஆற்றில் வீசிய பல்கலைக்கழக மாணவன் ஒருவரைக் கைதுசெய்ததாக கொடக்கவெல பொலிஸார் தெரிவித்தனர்.

கல்வி நடவடிக்கைக்காகச் சென்று கொண்டிருந்த தரம் 7 இல் கல்வி கற்கும்

2

# நான்கு பொலிஸ் அதிகாரிகளை சுட்டுக் கொலைசெய்த சார்ஜன்ட்

## திருக்கோவிலில் நள்ளிரவு பயங்கரம்; லீவு வழங்காததால் நடந்த விபரீதம்



(பாருக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பொலிஸ் நிலையத்துக்குள் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்தனர்.

2

## தகாத உறவைத் தட்டிக்கேட்ட கணவனை அடித்துப் படுகொலை செய்த மனைவி!

### நுவரெலியாவில் சம்பவம்

நுவரெலியா, பீட்ரு பகுதியில் மனைவியால் கணவன் அடித்துப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கணவன் - மனைவி இடையே நேற்றிரவு ஏற்பட்ட முரண்பாடு மோதலாக மாறியதையடுத்தே இந்தப் படுகொலை இடம்பெற்றுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையே (வயது - 44) இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் மனைவிக்கும் பிறிதொரு நபருக்கும் இடையில் தகாத உறவு இருந்து வந்துள்ளது.

2



## குடும்பச் சண்டையில் இளைஞர் படுகொலை

பதுளையில் இளைஞர் ஒருவர் கொடூரமாகத் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை, கருணாபுர பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயது நபரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

பித்தளையிலான பூந்தொட்டி மற்றும் நாற்காலியால் குறித்த இளைஞர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

குடும்பச் சண்டையே இந்தப் படுகொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய ஐவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக பதுளை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில்

2



## மார்கழிப் பெருவிழா ஆரம்பம்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும் சைவ மாணவர் சபையும் இணைந்து நடத்திய மார்கழிப் பெருவிழா இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இன்று காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் அப்பர் சுவாமிகள் அமர்வு முதலாவதாக ஆரம்பமானது.

முதலாம் அமர்வில்

2

## விலையேற்றத்தை கண்டித்து யாழில் தீப்பந்தப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

நாட்டில் அதிகரித்துள்ள பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் நேற்றிரவு தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மல்லாகம் பழம்

2

## ஏழு மலையானை வணங்கும் நீங்கள் நியாயமாக நடந்துகொள்கின்றீர்களா?

### மஹிந்தவிடம் மனோ கேள்விக்கணை



எடுத்ததெற்கெல்லாம் திருப்பதி ஏழு மலையானை மனைவி, பிள்ளை குட்டிகளுடன் நாடும் நீங்கள், ஏழு மலையானை வணங்கும் இந் நாட்டு இந்துக்களுக்கு நியாயமாக நடந்து கொள்கின்றீர்களா?

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

பிரதமர் மஹிந்த தனது மனைவி மற்றும் இளைய மகன் குடும்பத்தினருடன் திருப்பதி ஏழு மலையானை நேற்றுமுன்தினம் வழிபட்ட படங்கள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## பல்கலைக்கழக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாணவர் ஒருவரே இவ்வாறு ஆற்றில் வீசப்பட்டுள்ளார்.

பிரதேச மக்களால் மீட்கப்பட்ட குறித்த மாணவன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

காவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபரான பல்கலைக்கழக மாணவன் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து கொடக்கவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நான்கு பொலிஸ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அத்துடன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட 3 பொலிஸ் அதிகாரிகள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று நள்ளிரவு இந்தப் பயங்கரச் சம்பவம் இடம்பெற்றது.

குறித்த பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் வீடு செல்வதற்குப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் விடுமுறை கோரினார்.

அவருக்கு விடுமுறை வழங்காததால் ஆத்திரமடைந்த பொலிஸ் சார்ஜன்ட் சம்பவ தினமான நேற்றிரவு 11.30 மணியளவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வாகனத்தில் ஏறி ரோந்து நடவடிக்கைக்குச் செல்வதற்குத் தயாராகி இருந்த போது அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்.

இதையடுத்து அவரைத் தடுக்க முற்பட்ட பொலிஸார் மீதும் அவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். இதன் போது 3 பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட நான்கு அதிகாரிகள் திருக்கோவில் மற்றும் அக்கரைப்பற்று வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

படுகாயமடைந்த பொலிஸ் அதிகாரிகளில் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இன்று காலை உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் ஒரு பொலிஸ் சார்ஜன்ட், இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி ஒருவரும் அடங்குகின்றனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய பொலிஸ் சார்ஜன்ட் துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னர் தனது சொந்த ஊரான அத்திமலை பிரதேசத்துக்குத் தனது தனிப்பட்ட கப் வாகனத்தில் தப்பிச் சென்றார்.

பின்னர் அவர் இரண்டு ரி - 56 ரகத் துப்பாக்கிகள் மற்றும் 19 தோட்டாக்களுடன் அத்திமலை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

அத்திமலை பொலிஸ் பொறுப்பதிகாரி அவரைக் கைதுசெய்து மேலதிக விசாரணைகளுக்காக அம்பாறை பொலிஸ் தலைமையகத்தில் ஒப்படைத்தார்.

இந்தச் சம்பவம் குறித்து தற்போது விசேட விசாரணை ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

## மார்கழிப் பெருவிழா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தென்னாடு செந்தமிழ் ஆகம சிவ மடத்தின் நிறுவுனர் தென்னவன் பார்த்தீபன் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் ஸ்ரீசற்குணராஜாவின் உரையும் நவரத்தினம் பரந்தாமன் குழுவினரின் திருமுறை விண்ணப்பமும் மதுரையைச் சேர்ந்த சொ.சொ.மீ.சுந்தரம் ஐயா அவர்களின் தொண்டு நெறி எனும் தலைப்பிலான சிறப்புரையும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், மறவன்புலவு சச்சிதானந்தன், ஆன்மீகத் தலைவர்கள், மதப் பெரியவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மார்கழிப் பெருவிழா இன்றும் நாளையும் நான்கு அமர்வுகளாக இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விலையேற்றத்தைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிள்ளையார் ஆலயத்தில் ஆரம்பித்த தீப்பந்தப் போராட்டம் காங்கேசன்துறை வீதியின் ஊடாக சென்று சுன்னாகம் சந்தியில் நிறைவடைந்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் காங்கேசன் துறை தொகுதி அமைப்பாளர் வன்னியசிங்கம் பிரபாகரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற குறித்த தீப்பந்தப் போராட்டத்தில் விவசாயிகளும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.







## தகாத உறவைத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த விடயம் தெரியவர, அது தொடர்பில் மனைவியிடம் கணவர் வினவியுள்ளார். இதன்போது இருவருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த மனைவி, அவரைப் பொல்லால் கடுமையாகத் தாக்கி கொன்றுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஏழு மலையானை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் தனது சமூக ஊடகத் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ள மனோ எம்.பி.,

நல்லதுதான். எங்கள் கடவுள் எங்களுக்கு மட்டுமே என்று எழுதி எதுவும் கொடுக்கப்படவில்லை. நாங்களும் அப்படி நினைப்பதும் இல்லை. எங்கள் மனங்களும் எங்கள் மதத்தை போல் பரந்த விசாலமானதுதான். ஆனால் புரிபடாதது, ஒன்றுதான். எடுத்ததெற்கெல்லாம் ஏ8ழு மலையானை மனைவி, பிள்ளை குட்டிகளுடன் நாடும் நீங்கள், ஏழு மலையானை வணங்கும் இந்நாட்டு இந்துக்களுக்கு நியாயமாக நடந்துகொள்கின்றீர்களா? இந்துக்களை சரிசமமாக நடத்துகிறீர்களா? இந்தக் கேள்விகளை உங்கள் மனச்சாட்சி உங்களிடம் கேட்கவே கேட்காதா? மிஸ்டர் பிரைம் மினிஸ்டர்..! - என்று குறிப்பிட்டுள்ளார்.

## குடும்பச் சண்டையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதுளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்–
076 443 8622

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல் களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆட்சிப் பெருமை இது!

இலங்கை அரசியலில் சாதனை மேல் சாதனை புரிந்து வருகின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

இராணுவம் மற்றும் பாதுகாப்புத் துறையில் இருந்து நேரடியாக நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக உயர்ந்தவர் அவர்.

ஒரு கிராம சபைத் தேர்தலைக் கூட முன்பின் சந்திக்காது, நேரடியாக முதல் தடவையே ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டு அதில் பெருவெற்றி பெற்று ஜனாதிபதியானவர். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஒரு நாடாளுமன்றப் பொதுத் தேர்தலிலோ, மாகாண சபைத் தேர்தலிலோ, உள்ளூராட்சித் தேர்தலிலோ களம் கண்டவரல்லர் அவர். நேரடியாக நாட்டின் மிக உயர்ந்த தேர்தலிலே களம் இறங்கி முதல் தேர்தலிலேயே வெற்றி பெற்று அதிகாரத்துக்கு வந்தவர்.

அதனாலோ என்னவோ சாதாரண அரசியல்வாதிகளுக்குரிய கடப்பாட்டு வெளிப்பாடும் பொறுப்புணர்வுமின்றி அவர் செயற்படுகின்றார்.

சிறுபான்மையினரின் வாக்குத் தேவையில்லை, பெரும்பான்மையினரான பௌத்த, சிங்களவர்களின் வாக்குகளை மட்டுமே வளைத்துப் போட்டு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றலாம் என்பதையும் செயலில் நிரூபித்தவர்.

எனினும் குறுகிய காலத்தில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி பலரின் புருவத்தையும் உயர்த்த வைத்த அவரே, மிகக் குறுகிய காலத்தில் மக்களின் செல்வாக்கை இழந்து, மக்களின் ஏச்சுப் பேச்சுக்கும், கிண்டலுக்கும் கரித்துக் கொட்டலுக்கும் உள்ளான அரசின் தலைவர் என்ற பெயரையும் பெற்று நிற்கின்றார்.

அரசியல் பாரம்பரியங்களைப் புரிந்து கொள்ளாத இராணுவப் பாணி நிர்வாகத்தை மட்டுமே அறிந்திருக்கின்ற ஒருவரை ஆட்சி அதிகாரத்துக்குக் கொண்டு வந்த வரலாற்றுத் தவறின் விளைவை இலங்கை மக்கள் இப்போது பட்டனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

நாட்டின் விவசாய உற்பத்தி நிலை இப்போது மிக மோசமான கட்டத்தை அடைந்திருக்கின்றது. அதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் புத்திசாதுரியமற்ற, 'எடுத்தேன் கவிழ்த்தேன்' பாங்கிலான அரசியல் முடிவுகளும் தீர்மானங்களும்தான் – அவை மட்டும்தான் – காரணம் என்பது வெளிப்படையான, அப்பட்டமான உண்மை.

இரசாயன உரங்களை ஒரேயடியாக நிறுத்தி, சேதனப் பசளைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற நடைமுறைச் சாத்தியமற்ற திட்டத்தை எதேச்சதிகாரமாக நடைமுறைப்படுத்தியமையால் நாட்டில் விவசாய உற்பத்தி அரைக்கரைவாசி வீழ்ச்சியடைந்து விட்டதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது

தீர்க்க தரிசனமற்ற – பொறுப்பற்ற – விளைவுகளைப் பற்றி சிந்தித்தே பார்க்காத – ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பசுமைப் புரட்சி திட்டமே நாட்டின் பசுமையைக் கருக்கி அழித்து விட்டதாக விடயமறிந்தோர் தெளிவுபடுத்துகின்றனர்.

ஜனாதிபதி கோட்டாபயவின் யதார்த்தமற்ற இந்த முடிவுக்கு இணங்கி வராத காரணத்தினால் இந்த இரண்டு வருட கால ஆட்சியில் விவசாய அமைச்சின் செயலாளர்களாக இருந்த மூவர் பதவி நீக்கப்பட்டுள்ளனர்.

கடைசியாக விவசாய அமைச்சின் செயலாளராக இருந்தவர் உதித் கே.ஜயசிங்க. சேதனப் பசளைத் திட்டத்தை அவசர அவசரமாக நடைமுறைப்படுத்தியமையினாலேயே நெல் மற்றும் ஏனைய பயிர்களின் உற்பத்தி பெருமளவு வீழ்ச்சி கண்டது என்ற உண்மையைப் பகிரங்கப்படுத்தி 24 மணிநேரத்துக்குள் அவர் பதவியிலிருந்து தூக்கி கடாசப்பட்டிருக்கிறார். இவ்வளவுக்கும் அவர் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு மிக நெருக்கமானவர். அவரைப் பதவிக் கட்டில் ஏற்றுவதற்குக் காரணமாக அமைந்த 'வியத்மக' அமைப்பை உருவாக்கியவர்களுள் ஒருவர்.

ஆனால் உண்மையைப் பகிரங்கமாகப் பேசியமையால் அவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார். தவறான தலைமைத்துவத்தை உருவாக்கியதற்கான தண்டனையை அவர் அனுபவிக்க வேண்டியவராகியிருக்கின்றார். அவ்வளவுதான்.

# சைப்ரஸிலுள்ள இலங்கை துணைதூதரகத்தை மூடும் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்

## சுனில் ஹதுன்நெத்தி வலியுறுத்து



சைப்ரஸில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்தை மூடும் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹதுன்நெத்தி வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

சைப்ரஸில் பணிபுரிந்த 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தாங்கள் பங்களித்த சைப்ரஸ் சமூக பாதுகாப்பு நிதியை கோருவதில் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர் என அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சில இலங்கையர்களால் அந்நாட்டில் உள்ள சட்டங்கள் காரணமாக சுமார் 50 முதல் 60 லட்சம் வரை பெற முடியவில்லை என்றும் சைப்ரஸில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம் இந்த விவகாரத்தில் இராஜதந்திர தலையீட்டில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இருப்பினும் தூதரகத்தை மூடுவது தற்போது தடையாக இருக்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

இன்னும் அங்கு பணிபுரியும் இலங்கையர்களும் இராஜதந்திர பணிகளைத் தேடிச் செல்வதற்கு வழியின்றி நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இராஜதந்திர உறவுகள் இன்றியமையாதது மற்றும் பெருமளவிலான இலங்கையர்கள் பாதிக்கப்பட்டுள்ள ஒரு நாட்டில் இராஜதந்திர பணிகளை முடக்குவது நியாயமானதல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சைப்ரஸில் உள்ள துணைத் தூதரகத்தை மூடுவது அல்லது சைப்ரஸ் சமூக பாதுகாப்பு நிதி தொடர்பான விடயங்களைக் கையாளக் கூடிய ஓர் அதிகாரியை வெளிவிவகார அமைச்சகம் நியமிக்கும் முடிவை அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

டொலர் நெருக்கடி காரணமாக சைப்ரஸ், நைஜீரியா மற்றும் பிராங்போர்ட்டில் உள்ள மூன்று வெளிநாட்டு தூதரகங்களை அரசாங்கம் மூடவேண்டியுள்ளமை வருத்தமளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ் இளைஞர் ஒருவர் கனடாவில் படுகொலை!

கனடா – ஸ்காபரோவில் தமிழ் இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் மற்றுமொரு தமிழ் இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மகின் குகதாசன் என்ற 19 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

ரொறண்டோவில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் கடந்த 23 ஆம் திகதி முறைப்பாடு கிடைக்கப்பெற்றதாகப் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் ரொறண்டோவைச் சேர்ந்த 19 வயதான அனோஜ் தர்சன் என்ற சந்தேக நபரைக் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும், அவர் மீது இரண்டாம் நிலை கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# விக்கிரகங்களைத் திருடியவர் காங்கேசன்துறையில் கைது

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் அண்மைய நாள்களில் இந்து ஆலயங்களில் 5 விக்கிரகங்கள் திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட 5 விக்கிரகங்களும் கைமாற்றப்பட்டுள்ளன என ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

டிசெம்பர் 9ஆம் திகதிக்கும், 23 ஆம் திகதிக்கும் இடையே தெல்லிப்பழை மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் உள்ள இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடப்பட்டன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் உப பொலிஸ் பரிசோதகர் நிதர்சன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் காங்கேசன்துறை நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவர் நேற்று (வெள்ளிக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது தொலைபேசியில் திருடப்பட்ட 5 விக்கிரகங்களின் ஒளிப்படங்களும் காணப்பட்டன. தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் மேலும் 2 விக்கிரகங்கள் கைப்பற்றப்பட்டன.

அவை இரண்டும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன. சந்தேக நபரும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டார்.

# டெங்கு நோயாளர்களின் வீதத்தில் பாரிய அதிகரிப்பு

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவிப்பு

15 மாவட்டங்களில் கண்டறியப்பட்ட டெங்கு நோயாளர்களின் வீதத்தில் பாரிய அதிகரிப்பு காணப்படுவதாகவும் மேல் மாகாணத்தில் அதிகளவானோர் பதிவாகியுள்ளனர் எனவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த வருட காலப்பகுதியில், நாட்டில் 33 ஆயிரத்து 269 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும் அதில் 60 வீதமானவர்கள் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் இருந்து கண்டறியப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஷிலந்தி செனவிரத்ன ஊடகமொன்றுக்குத் தெரிவித்தார். கண்டி, காலி, யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, மன்னார், மட்டக்களப்பு, புத்தளம், திருகோணமலை, பதுளை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலும் கணிசமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும் வைத்தியர் செனவிரத்ன தெரிவித்தார்.

அத்தோடு, காய்ச்சல் தொடர்ந்தால் உடனடியாக மருத்துவ சிகிச்சையைப் பெறுமாறு மக்களை வலியுறுத்தினார்.



# 2021ஆம் ஆண்டில் குடியேற்றவாசிகளை வரவேற்கும் இலக்கை அடைந்தது கனடா

2021ஆம் ஆண்டில் 401,000 வெளிநாட்டினருக்கு நிரந்தரக் குடியுரிமை வழங்கும் இலக்கை கனடா அடைந்துள்ளது.

தொற்று நோய் நெருக்கடி காரணமாக வெளிநாடுகளில் இருந்து வரும் புதிய குடியேற்றவாசிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் ஏற்கனவே கனடா வந்து விதிவிட உரிமை கோரியுள்ளவர்கள் மீது அரசு கவனம் செலுத்தியது. இதன்மூலம் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை கனடா அடைந்துள்ளது என கனடிய குடிவரவு அமைச்சர் சீன் ப்ரேசர் கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

கனடா அதன் பொருளாதார வளர்ச்சிக்கு குடியேற்றத்தை நம்பியுள்ளது. எனினும் தொற்று நோய் நெருக்கடி காரணமாக எல்லைகள் மூடப்பட்டமையால் 2000–ஆம் ஆண்டில் கனடாவுக்கு வந்த குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை 45% குறைந்து. அந்த ஆண்டில் கனடா வந்த குடியேற்றவாசி களின் எண்ணிக்கை 185,000 ஆக வீழ்ச்சியடைந்தது.

இந்நிலையில் இவ்வாண்டு 401,000 வெளிநாட்டினருக்கு நிரந்தரக் குடியுரிமை வழங்கும் இலக்கை நிர்ணயித்திருந்த நிலையில் அந்த இலக்கை அடைந்துள்ளது என ப்ரேசர் கூறினார்.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான அரசாங்கம் 2015 இல் ஆட்சிக்கு வந்ததில் இருந்து கனேடிய பொருளாதார வளர்ச்சிக்கு குடியேற்றத்தை நம்பியுள்ளது. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 1% அளவுக்கு ஒவ்வொரு ஆண்டும் புதிய குடியேற்றவாசிகளை வரவேற்கும் திட்டம் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டது. இந்நிலையில் இந்த இலக்கை அடையும் நோக்குடன் 2022 ஆம் ஆண்டு 411,000 புதிய நிரந்தர குடியிருப்பாளர்களை வரவேற்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை, தொற்று நோய் நெருக்கடிக்கு மத்தியிலும் கனடாவின் பொருளாதாரம் பாரியளவில் தளம்பலின்றி நவம்பரில் தொடர்ந்து ஆறாவது மாதமாக சீரான வளர்ச்சிப் போக்கில் உள்ளது. அத்துடன், தொற்றுநோய்க்கு முந்தைய பொருளதார நிலையை நோக்கி கனடா தொடர்ந்து முன்னேறக்கூடும் என்பதற்கான சமிக்ஞைகள் தெரிகின்றன என பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்

# தாழ்மையுடன் நடந்து கொள்ளுங்கள் போப் ஆண்டவரின் கிறிஸ்மஸ் செய்தி

கிறிஸ்மஸ் பண்டிகை காலத்தில் தாழ்மையுடன் நடந்து கொள்ளுங்கள் என போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு போப் ஆண்டவர் பிரான்சிஸ் ஆற்றிய உரையில், தாழ்மை உள்ளவர்கள கடந்த காலத்தைப் பற்றி மட்டுமல்லாமல் எதிர்காலத்தின் மீதும் அக்கறை கொண்டவர்கள், ஏனென்றால் அவர்களுக்கு முன்னோக்கி பார்க்கவும், தங்கள் கிளைகளை பரப்பவும், கடந்த காலத்தை



கார்டினல்கள், பிப்புகள் மற்றும் அதிகார வர்க்கத்தினருக்கு ஒரு செய்தி விடுத்துள்ளார்.

அந்த செய்தியில் அவர், 'கிறிஸ்மஸ் பண்டிகை காலத்தில் தாழ்மையுடன் நடந்து கொள்ளுங்கள். தற்பெருமை, தன்னலம், கவசத்தின் மினுமினுப்பு உங்கள் ஆன்மிக வாழ்க்கையை சிதைத்து தேவாலயத்தின் பணியை சீர்குலைத்து விடுகிறது.

நன்றியுடன் நினைவில் கொள்ளவும் தெரியும்.

அதே நேரத்தில் பெருமிதம் உள்ளவர்கள் வெறுமனே திரும்பத்திரும்ப, கடினமாக தங்களை இணைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் அறிந்ததைப் பற்றி உறுதியாக நிற்கிறார்கள். புதியவற்றின் மீது பயப்படுகிறார்கள். ஏனென்றால் அவர்களால் கட்டுப்படுத்த முடியாது' என கூறினார்.



# அமெரிக்காவில் ஒமிக்ரோன் அச்சுறுத்தலால் 210 விமான சேவைகள் திடீர் நிறுத்தம்!

ஒமிக்ரோன் தொற்று நோய் அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில் உலகெங்கும் விமான சேவைகள் மீண்டும் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டு வருவதுடன், விமானப் பயணிகளும் பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்கி வருகின்றனர். அமெரிக்காவில் நேற்று ஒரு நாளில் மட்டும் திட்டமிடப்பட்ட 210 விமான சேவைகள் திடீரென ரத்துச் செய்யப்பட்டன.

சிகாகோவை தளமாகக் கொண்ட யுனைடெட் ஏர்லைன்ஸ் நேற்று 120 விமானங்களை ரத்து செய்துள்ளது. அதே நேரத்தில் அட்லாண்டாவை தளமாகக் கொண்ட டெல்டா ஏர்லைன்ஸ் சுமார் 90 விமானங்களை ரத்து செய்ததாகக் கூறியது.

எனினும் முன்பதிவு செய்த பயணிகள் விமான நிலையங்களில் சிக்கித் தவிக்கின்றமையை தவிர்க்கும் வகையில் பயணிகளுடன் தொடர்புகொண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருவதாக இரு விமான சேவை நிறுவனங்களும் அறிவித்துள்ளன.

ஒமிக்ரோன் தீவிர பரவல் எங்கள் விமான நிறுவன பணியாளர்கள் மத்தியில் தீவிர நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவாக விமானங்களை நாங்கள் ரத்து செய்ய வேண்டியிருந்தது. இதனால் பாதிக்கப்படக்கூடிய பயணிகளுக்கு தேவையான உதவிகளைவழங்கிவருகிறோம் எனயுனைடெட் ஏர்லைன்ஸ் மற்றும் டெல்டா ஏர்லைன்ஸ் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.



# கஞ்சா செடிகளை பயிரிட அனுமதி வழங்கியது மோல்டா அரசாங்கம்

ஏழு கிராம் கஞ்சாவை வைத்திருக்கவும் தமது வீட்டுத் தோட்டத்தில் நான்கு கஞ்சா செடிகளை பயிரிடவும் மோல்டா (Malta) அரசாங்கம் தமது பிரஜைகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இது சம்பந்தமாக கடந்த வாரம் மோல்டா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட யோசனைக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைத்துள்ளது.

எனினும் பகிரங்கமாக கஞ்சா புகைக்கவோ அல்லது பயன்படுத்தவோ அனுமதி வழங்கப்பட மாட்டாது என்பதுடன் குழந்தைகளுக்கு எதிரில் கஞ்சாவை பயன்படுத்தினால், அபராதம் விதிக்கப்படும் எனவும் மோல்டா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மோல்டா தெற்கு ஐரோப்பாவின் மத்திய தரைக் கடலில் அமைந்துள்ள ஒரு தீவு நாடாகும். ஏழு தீவுகளைக் கொண்ட இந்த நாட்டில் நான்கு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆர்ஜென்டினாவில் பென் ஷோ நடத்தப்படுவதற்கு எதிராக போராட்டம்




ஆர்ஜென்டினாவில் பென் ஷோக்கள் நடத்தப்படுவதற்கு எதிராக, பிளாஸ்டிக் கழிவுகளால் தயாரிக்கப்பட்ட ஆடைகளை அணிந்தபடி நூதன முறையில் போராட்டம் நடைபெற்றது.

தலைநகர் பியூனஸ் அயர்ஸில் உள்ள பிரபல ஆடைத் தயாரிப்பு நிறுவனத்தின் முன்பு, பலர் பென் ஷோ பாணியிலேயே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பென் ஷோக்களுக்காக தயாரிக்கப்படும் ஆடைகள் அதிகம் பயன்படுத்தப்படுவது இல்லை என்றும், ஆனால் அதற்காக அதிகளவு தண்ணீர் வீணடிக்கப்படு வதாகவும் போராட்டக்காரர்கள் குற்றம்சாட்டினார்.

அந்தவகையில், சுற்றுச்சூழல் மற்றும் பூமி வெப்பமயமாதல் பிரச்னைகளுக்கு பென் ஷோக்களும் முக்கிய காரணம், என்றும் அவர்கள் கருத்து தெரிவித்தனர்.

# இந்தியாவில் அதிகரிக்கும் கொரோனாப் பாதிப்பு புதிதாக 7,189 பேருக்கு தொற்று உறுதியானது



இந்தியாவில் மேலும் 387 பேர் கொரோனா பாதிப்பால் உயிரிழந்துள்ளனர் என இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் இன்று தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 7,189 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தப் பாதிப்பு அதற்கு முன்னைய தினத்தைவிட 18.6% உயர்வாகும். இதில் கேரளாவில் மட்டும் 2,605 பேர் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பாக இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில், இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக ஏழாயிரத்து 189 பேருக்கு தொற்று பாதிப்பு உறுதியாகிஉ ள்ளது. இதன்மூலம் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 3,47,79,815 ஆக அதிகரித்துள்ளது.

அதேபோல், தொற்று பாதிப்புகளுக்கு ஒரே நாளில் 387 பேர் உயிரிழந்துமுள்ளனர். இதன் மூலம் உயிரிழந்தோர் மொத்த எண்ணிக்கை 4,79,520 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் கொரோனாப் பாதிப்பில் இருந்து 7,286 பேர் குணமாகி வீடு சென்றுள்ளனர். இதனையடுத்து, குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3,42,23, 263 ஆக உயர்ந்துள்ளது.

இதனிடையே இந்தியாவில் கொரோனாப் பாதிப்பைக் கண்டறிய நேற்று ஒரே நாளில் 11,12, 195 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதாகவும், இதுவரை மொத்தம் 67,10,51,627 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன எனவும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி குழுமம் (ஐ.சி.எம்.ஆர்.) தெரிவித்துள்ளது.



## இந்திய முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பிறந்தநாள் மோடி, குடியரசுத்தலைவர் மலர் தூவி மரியாதை

முன்னாள் இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் 97 ஆவது பிறந்தநாள் இன்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி, டெல்லியில் உள்ள அவரது நினைவிடத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பிரதமர் மோடி உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இதையடுத்து அங்கு உரையாற்றிய பிரதமர் மோடி, வாஜ்பாயின் பிறந்தநாளில் அவரை நினைவுகூர்வோம். தேசத்திற்காக அவர் ஆற்றியுள்ள செழுமையான சேவைகளால் நாம் உத்வேகம் பெற்றுள்ளோம். இந்தியாவை வலுவாக்கவும் வளர்ச்சியடைய வைக்கவும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். அவரது வளர்ச்சி முன்னெடுப்புகள் லட்சக்கணக்கான இந்தியர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன, என்று தெரிவித்துள்ளார்.

## உத்தரப்பிரதேச தேர்தல் ஒத்திவைக்கப்படுமா? தலைமைத் தேர்தல் ஆணையர் தகவல்



உத்தரபிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப், கோவா, மணிப்பூர் ஆகிய 5 மாநிலங்களில் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் சட்டசபைக்கான தேர்தல் நடக்கவுள்ளது.

இதற்கிடையே, ஒமிக்ரோன் வைரஸ் இந்தியாவில் வேகமாகப் பரவி வருவதால், அதனைக் கருத்திற் கொண்டு, உத்தரபிரதேச சட்டசபைத் தேர்தலை ஓரிரு மாதங்கள் ஒத்திவைப்பது குறித்து பரிசீலிக்குமாறு மத்திய அரசையும், தேர்தல் ஆணையத்தையும் அலகாபாத் நீதிமன்றம் நேற்று முன்தினம் கேட்டுக்கொண்டது. இதனால், ஐந்து மாநிலங்களுக்குமான சட்டசபைத் தேர்தல்களும் ஒத்திவைக்கப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த நிலையில், தலைமை தேர்தல் ஆணையரான சுசில் சந்திரா நேற்று உத்தரகாண்ட் மாநிலத்துக்குச் சென்று, சட்டசபை தேர்தல் ஆயத்த பணிகளை ஆய்வு செய்தார். பிறகு அவர் ஊடகங்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது, உயர்நீதிமன்றத்தின் யோசனை குறித்து கேட்டதற்கு, உத்தரப்பிரதேசத்துக்கு அடுத்த வாரம் செல்கிறேன். அங்குள்ள நிலைவரத்தை ஆய்வு செய்வேன். சூழ்நிலைக்கேற்ப இது குறித்து உரிய முடிவு எடுக்கப்படும். உத்தரகாண்ட் மாநிலத்தைப் பொறுத்தவரை ஒரே ஒருவருக்கு மட்டுமே ஒமிக்ரோன் வந்துள்ளது. 18 வயதைத் தாண்டிய 100 சதவீதம் பேரும் ஒரு டோஸ் தடுப்பூசியாவது செலுத்திக் கொண்டுள்ளனர். அதனால் நிலைமை கட்டுப்பாட்டில் இருக்கிறது. இருப்பினும், அரசியல் சட்ட நிலைப்பாட்டின்படி, கொரோனாவில் இருந்து பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒரே நேரத்தில் பலர் குழுமுவதைத் தடுக்க, ஒரு வாக்குச்சாவடிக்கான வாக்காளர்கள் எண்ணிக்கை 1,500 இல் இருந்து 1,200 ஆக குறைக்கப்பட்டுள்ளது. இதனால், புதிதாக 623 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. 80 வயதைத் தாண்டிய வாக்காளர்கள் வீட்டில் இருந்தே வாக்களிக்கும் வசதி முதல்முறையாக அறிமுகப்படுத்தப்படுகிறது, என்று அவர் தெரிவித்தார்

## இந்தியாவில் ஒமிக்ரோன் பாதிப்பு எண்ணிக்கை 415 ஆக உயர்ந்தது

உலகை அச்சுறுத்தி வருகிற ஒமிக்ரோன் வைரஸ் இந்தியாவில் கடந்த இரண்டாம் திகதி முதன்முதலாக அடையாளம் காணப்பட்டது. கர்நாடகத்தில் முதலில் இருவருக்கு இந்தத் தொற்றுப் பாதிப்பு ஏற்பட்டது. தொடர்ந்து இந்த 23 நாட்களில் இந்தியாவின் 17 மாநிலங்களுக்கும் பரவி, வேகமடைந்துள்ளது.

இந்த நிலையில் இந்தியாவில் தற்போதைய நிலைவரப்படி, ஒமிக்ரோனால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 415 ஆக உயர்ந்துள்ளதாக இந்திய மத்திய சுகாதாரத்துறைதெரிவித்துள்ளது.

இதன்படி மராட்டியத்தில் 108 பேருக்கும், டெல்லியில் 79 பேருக்கும், குஜராத்தில் 43 பேருக்கும், தெலுங்கானாவில் 38 பேருக்கும், கேரளாவில் 37 பேருக்கும், தமிழ்நாட்டில் 34 பேருக்கும், கர்நாடகத்தில் 31 பேருக்கும், ராஜஸ்தானில் 22 பேருக்கும், ஏனைய மாநிலங்களில் ஐந்துக்குக் குறைவான எண்ணிக்கையிலும் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

மராட்டிய மாநிலத்தில் ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்ட 108 பேரில் இதுவரை 42 பேர் குணமடைந்துள்ளனர் என்றும் டெல்லியில் ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்ட 79 பேரில் இதுவரை 23 பேர் குணமடைந்துள்ளனர் என்றும் இந்திய மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.





## பஞ்சாப் நீதிமன்றக் குண்டுவெடிப்பு உயிரிழந்தவர் தகவல் வெளியானது

பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் உள்ள கீழமை நீதிமன்ற வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை குண்டு வெடித்தது. இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தமையுடன், 6 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தியாமுழுவதும்பெரும்அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக இந்தியத் தேசிய புலனாய்வு அமைப்பு, தேசிய பாதுகாப்புப் படை உள்பட பல்வேறு அமைப்புகள் விசாரணை நடத்தி வருகின்றன.

இந்தநிலையில், இந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. பஞ்சாப் பொலிஸில் பணியாற்றிய கனங்தீப் சிங் என்பவரே உயிரிழந்தவர் என்ற தகவல் வெளியாகியுள்ளது. லூதியானாவின் ஹனா பகுதியைச் சேர்ந்த கனங்தீப் சிங், மாநில பொலிஸில் தலைமைக் காவலராகப் பணியாற்றியுள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் கும்பலுடன் கனங்தீப் சிங்கிற்கு தொடர்பு இருந்தமை கண்டறியப்பட்டதையடுத்து அவர் 2019 ஆம் ஆண்டு தலைமைக் காவலர் பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். போதைப்பொருள் கடத்தல் வழக்கிலும் அவர்மீது விசாரணை நடைபெற்றுள்ளது. குண்டு வெடிப்பு நடைபெற்ற பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கைப்பேசி அட்டை உதவியுடன் உயிரிழந்தவர் கனங்தீப் சிங் என்பதை பொலிஸார் உறுதி செய்துள்ளனர். பணியில் இருந்து நீக்கப்பட்டதற்கு பழிதீர்க்கும் வகையில் இந்த குண்டுவெடிப்புத் தாக்குதலை கனங்தீப் சிங் நடத்தி இருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணை நடைபெற்று வருகிறது.

நீதிமன்றக் கழிவறையில் வைத்து வெடிகுண்டைப் பொருத்தும்போது எதிர்பாராத விதமாக திடீரென அங்கேயே வெடிகுண்டு வெடித்திருக்கலாம் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர். அந்தக் கோணத்திலும் விசாரணை நடைபெற்று வருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனைக்கு மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்கள் அனுமதி

கிழக்கு மாகாணத்தில் யேசு பாலகனின் பிறப்பை குறிக்கும் கிறிஸ்மஸ்தினத்தை முன்னிட்டு சகல கிறிஸ்தவ தேவாலயங்களிலும் நள்ளிரவு ஆராதனை மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களின் பங்களிப்புடன் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இடம்பெற்றது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனை மட்டக்களப்பு புளியந்தீவு மரியாள் தேவாலயத்தில் மட்டு அம்பாறை மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனை விசேட திருப்பலி இடம்பெற்றது.

ஆலய பங்குதாரர்களால் மறை மாவட்ட ஆயர் வரவேற்று அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றி அதன் பின்பு யேசு பாலகனின் பிறப்பை குறிக்கும் குழந்தை யேசுவின் திருவுருவம் ஆலய மாட்டு தொழுவத்தில் வைக்கப்பட்டதன் பின்பு கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனை விசேட திருப்பலி இடம்பெற்றது.

கிறிஸ்மஸ் விசேட திருப்பலி ஆலய பங்குதந்தை யோசப்மேரி அடிகளாரின் பங்குபற்றுதலுடன் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் நல்லாசி வேண்டியும் நாட்டின் கொரோனா வைரஸிலிருந்து பொது மக்கள் விரைவில் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பவும் இங்கு அருட்தந்தையர்களினரால் விசேட கூட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

சீரான காலநிலைக்கு மத்தியிலும் விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களின் வருகை பதியப்பட்டு சமூக இடைவெளிகளை பின்பற்றி கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

# தூய பசும்பால் மற்றும் இயற்கை உணவு விற்பனை செய்யும் நிலையம் திறப்பு




கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் பால் உற்பத்தியாளர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி தூய பசும்பால் விற்பனை நிலையங்களை ஆரம்பிக்க இராஜாங்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விசேட திட்டத்திற்கு அமைய மட்டக்களப்பு நகரில் தூய பசும்பால் மற்றும் இயற்கை உணவு விற்பனை செய்யும் நிலையம் ஒன்று கிழக்குமாகாண விவசாய கால்நடை உற்பத்தி மற்றும் மீன்பிடி மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சின் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா இன்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி உதயராணி குகேந்திரா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் டாக்டர் ஏ .எம்.பாசி மற்றும் அரச அதிகாரிகளும், கால்நடை உற் பத்தியாளர்களும் கலந்து கொண்டனர்.

கால்நடை விவசாய கால்நடை மற்றும் அமைச்சின் செயலாளர் திருமதி பத்மராஜா இங்கு கருத்து வெளியிடுகையில் – பால் உற்பத்தியை அதிகரித்து மக்கள்அதிக விலை கொடுத்து பால்மா அருந்துவதை தவிர்த்து திரவ பால் அருந்துவதை ஊக்குவிப்பதே இந்த திட்டத்தின் பிரதான நோக்கமாகும் என தெரிவித்தார்.



# பிள்ளையார் சிலைக்கு மேல் வைக்கப்பட்ட புத்தர் சிலை!

திருகோணமலை மாவட்டம் மூதூர் நகரின் 64ஆம் கட்டையில் உள்ள மலையடி பிள்ளையார் சிலைக்கு மேல் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவது, மூதூர் 64ஆம் கட்டையில் உள்ள மலையடி பிள்ளையார் சிலைக்கு மேல் திடீரென கடந்த 23 ஆம் திகதி புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை காலை 9 மணியளவிலும் 64 ஆம் கட்டை மலை பிள்ளையாருக்கு முன் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

எனவே, குறித்த பகுதிக்கு சைவசமய நலன் விரும்பிகள் வருகை தந்து போராட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு, ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.



# மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வி உபகரணம் வழங்கும் நிகழ்வு

கோறளைப்பற்று மத்தி ஒளிமயம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலயத்திலுள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வி உபகரணம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.சி.ஐயூப்கான் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கோறளைப்பற்று மத்தி ஒளிமயம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவர் எம்.எம்.றபீக், அமைப்பின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கோறளைப்பற்று மத்தி ஒளிமயம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலயத்திலுள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களின் கற்றல் நடவடிக்கையினை மேம்படுத்தும் நோக்கில் கல்வி உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன என கோறளைப்பற்று மத்தி ஒளிமயம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவர் எம்.எம்.றபீக் தெரிவித்தார்.



# சிறுவர் கழக பாடசாலையில் நூலகம் திறந்து வைப்பு

சௌபாக்கியா வேலைத்திட்டத்தில் ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் சமுர்த்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் வாசிப்பு திறனை அதிகரிக்கும் நோக்கில் சிறுவர் கழக பாடசாலையில் நூலகம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட ஓட்டமாவடி தாருல் உலூம் வித்தியாலயத்தில் வானவில் சமுர்த்தி சிறுவர் கழக நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆஷஷ் தொடரின் மூன்றாவது போட்டி இரு அணிகளினதும் விவரம் அறிவிப்பு





ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் இரு அணி வீரர்களின் விவரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளரான ஸ்கொட் போலன்ட் தனது டெஸ்ட் அறிமுகத்தை பெறுவது உறுதியாகியுள்ளது. இதன்மூலம் ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியில் இடம்பிடிக்கும் நான்காவது பழங்குடியினராக போலண்ட் திகழவிருக்கிறார்.

அதேபோல, கொவிட் தொற்று ஏற்பட்டிருக்கலாமென்றஅச்சத்தின்காரணமாகதனிமைப்படுத்தப்பட்டு இரண்டாவது டெஸ்ட்டில் விளையாட முடியாது ஓய்வில் இருந்த அணித்தலைவர் பட் கம்மின்ஸ் மீண்டும் அணிக்குள் வருவதை உறுதிப்படுத்தியுள்ளார்.

பட் கம்மின்ஸ் தலைமையிலான ஆஸ்திரேலிய அணியின் விளையாடும் பதினொருவரில், டேவிட் வோனர், மார்கஸ் ஹரிஸ், மார்னஸ் லபுஷேன், ஸ்டீவ் ஸ்மித், ட்ராவிஸ் ஹெட், கமரூன் கிரீன், அலெக்ஸ் கேரி, மிட்ச்செல் ஸ்ட்ராக், நதன் லயொன், ஸ்கொட் போலன்ட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இங்கிலாந்து அணியில் நான்கு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜொனி பேயார்ஸ்டோ, ஜக் லீச், ஸக் க்ரொவ்லி மற்றும் மார்க் வுட் ஆகியோர் ஒல்லி போப், ஸ்டூவர்ட் பிராட், ரொரி பேர்ன்ஸ் மற்றும் கிறிஸ் வோக்ஸ் ஆகியோருக்குப் பதிலாக இணைக்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்து அணியின் பதினொருவர் விவரம் - ஜோ ரூட் தலைமையிலான அணியில், ஹசீப் ஹமீட், ஸக் கிரொவ்லி, டேவிட் மாலன், பென் ஸ்டோக்ஸ், ஜொனி பெயர்ஸ்டோ, ஜோஸ் பட்லர், மார்க் வுட், ஒல்லி ரொபின்சன், ஜக் லீச், ஜேம்ஸ் ஆன்டர்சன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதுவரை நடந்துமுடிந்துள்ள இரண்டு போட்டிகளிலும் வெற்றிபெற்று ஆஸ்திரேலிய அணி, 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது ஆஷஷ் டெஸ்ட் போட்டி, நாளை மெல்போர்ன் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

## விராட்கோலிக்கு பந்து வீசுவது கடினமானது தெ.ஆ. பந்து வீச்சாளர் ஒலிவியர் கருத்து

இந்திய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் மேற்கொண்டுள்ள கிரிக்கெட் சுற்றுப்பயணத்தில் 3 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் போட்டி நாளை செஞ்சூரியனில் தொடங்குகிறது.

இந்த நிலையில், இந்திய டெஸ்ட் அணித்தலைவர் விராட் கோலிக்கு பந்து வீசுவது கடினமானது என்று தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் டுவான் ஒலிவியர் தெரிவித்துள்ளார்.

உலகத் தரம் வாய்ந்த வீரர்களுக்கு எதிரான இந்தத் தொடர் எனது வாழ்க்கையில் முக்கியமானதாக இருக்கும். இது ஒரு உற்சாகமான சவால். விராட் கோலிக்கு பந்து வீசுவது கடினமாக இருக்கும். ஆனால், அதை உற்சாகமாக எதிர்பார்க்கிறேன். உலகக் கிரிக்கெட்டில் முதல் நிலையிலுள்ள 4 துடுப்பாட்ட வீரர்களில் ஒருவருக்கு நான் பந்து வீசபோகிறேன். என்னைப் பொறுத்தவரை முதல் போட்டியில் சிறப்பாக செயல்படுவது முக்கியம். இங்குள்ள



சூழ்நிலையை நாங்கள் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், என்று அவர் கூறியுள்ளார்.

## டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் தரவரிசை லபுஷேன் முதலிடத்திற்கு முன்னேற்றம்

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்களுக்கான ஐ.சி.சி. தரவரிசையில் ஆஸ்திரேலியாவின் லபுஷேன் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆஷஷ் இரண்டாவது டெஸ்ட் போட்டியையடுத்து, ஐ.சி.சி. தரவரிசை பட்டியல் புதுப்பித்து வெளியிடப்பட்டுள்ளது. ஆஷஷ் இரண்டாவது டெஸ்ட்டில் ஒரு சதம் மற்றும் அரைச்சதம் அடித்ததன் மூலம் இங்கிலாந்தின் கப்டன் ஜோ ரூட்டை பின்னுக்குத் தள்ளி லபுஷேன் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.



## ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் அன்டி மரேக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது

டென்னிஸ் உலகின் முன்னாள் முதல் நிலை வீரரான அன்டி மரே தற்போதைய டென்னிஸ் தரவரிசையில் 134 ஆது இடத்தில் உள்ளபோதும் அவருடைய வாழ்நாள் வெற்றிகளைக் கருத்தில் கொண்டும் அவருடைய போராடும் குணத்திற்காகவும் அவருக்கு ஆஸ்திரேலிய ஓபன் தொடரில் பங்கேற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.




இதற்கான அதிகாரபூர்வ வைல்ட் கார்ட் அழைப்பிதழை ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் கூட்டமைப்பின் அமைப்பாளர்கள் அவருக்கு வழங்கியுள்ளனர். 34 வயதாகும் அன்டி மரே இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவர் 2013 மற்றும் 2016 ஆம் ஆண்டில் விம்பிள்டன் பட்டங்களை வென்றுள்ளார். அதுமட்டுமன்றி 2016 ஆம் ஆண்டு நடந்த யு.எஸ். ஓபன் தொடரிலும் இவர் சம்பியன் பட்டம் வென்றார். 2019 ஆம் ஆண்டு இவருக்கு ஏற்பட்ட காயம் காரணமாக டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்பதில் இருந்து விலகியிருந்தார். பின்னர் சமீபத்தில் நடந்து முடிந்த உலக டென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரில் இவர் பங்கேற்றார்.

இந்த நிலையில் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெறவிருக்கும் ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் தொடரில் இவர் பங்கேற்க இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஐந்து முறை இறுதிப் போட்டியில் பங்கேற்ற போட்டியாளரான அன்டி மரேக்கு வைல்ட் கார்ட் வழங்கப்பட்டது, என்று ஆஸ்திரேலிய ஓபன் தொடரின் தலைமை இயக்குநர் கிரேக் டைலே டுவிட்டர் பதிவின் மூலம் தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் அடுத்த ஆண்டு ஜனவரி 17 முதல் 30 வரை நடைபெறவுள்ளது.

# மகிழ்ச்சியை மற்றவர்களுக்கும் பகிர்ந்து உண்மையான மகிழ்வை எட்டுவோம்!

## திருமலை மறைமாவட்ட ஆயர் நத்தார் வாழ்த்து



மகிழ்ச்சி எங்கள் உள்ளத்திலே இருக்கவேண்டும். இல்லங்களிலே இருக்கவேண்டும். எங்களிடம் அது இருப்பதைவிட அடுத்தவரோடு எம்மிடம் உள்ளதைப் பகிர்ந்து கொள்வதாக இருக்க வேண்டும். எங்களில் மகிழ்ச்சி காண்பதைவிட நாங்கள் கொடுப்பதிலே அடுத்தவர் காண்கின்ற மகிழ்ச்சி தான் உண்மையான மகிழ்ச்சியாக அமைதல் வேண்டும்.

இவ்வாறு திருமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு நொயல் இம்மானுவேல் அடிகள் விடுத்துள்ள நத்தார்ச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

கனேடியத் தமிழ் வானொலிக்கு அவர் வழங்கிய கிறிஸ்து பிறப்பு விழாச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

கிறிஸ்து பிறப்புப் பெருவிழா உலகம் முழுமைக்குமான பெருவிழாவாக அமைந்திருக்கின்றது.

அன்று வானதூதர் இடையர்களுக்குக் காட்சி கொடுத்து 'அஞ்சாதீர்கள்! இதோ எல்லா மக்களுக்கும் பெருமகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை அறிவிக்கின்றேன்!' என்று அவர்கள் அந்த செய்தியைக் கொடுக்கின்றார்கள்.

செய்தியை அறிந்ததும் இடையர்கள் விரைந்து வந்து குழந்தை இயேசுவைப் பார்க்கின்றார்கள்.பார்த்து, மகிழ்ந்து தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றார்கள். இடையர்கள் மட்டுமல்ல ஞானிகளும் யூதரின் அரசர் பிறந்திருக்கின்றார் என்று அறிந்து தேடி வருகின்றார்கள். இறைவனும் தம்மை வெளிப்படுத்துகின்றார். இந்த,கிறிஸ்து பிறப்புப் பெருவிழா என்பது அன்பின் விழாவாக,மகிழ்வின் விழாவாக, பகிர்வின் விழாவாக,அமைதியின் விழாவாக அமைந்துள்ளது.

கடவுள் தமது அன்பை இந்த உலகத்தாரோடு பகிர்ந்து கொள்கிறார். தமது ஒரே திருமகனை இந்த உலகத்துக்கு அனுப்புவதன் மூலமாக தம் அன்பை வெளிப்படுத்துகின்றார். அந்த அன்பிலேதான் இரக்கம், மன்னிப்பு, அமைதி ஆகியன இருக்கின்றன. ஒப்புரவு இருக்கின்றது. எனவே நாம் மகிழ்ந்திருப்பதற்கு சிறப்பான காரணம் இருக்கின்றது.

எனவே இந்த மகிழ்ச்சியை நாங்கள் எப்போதும் கொண்டாடவேண்டும். அந்த மகிழ்ச்சி எங்கள் உள்ளத்திலே இருக்கவேண்டும். இல்லங்களிலே இருக்கவேண்டும். எங்களிடம் அது இருப்பதைவிட அடுத்தவரோடு எம்மிடம் உள்ளதைப் பகிர்ந்து கொள்வதாக இருக்க வேண்டும். எங்களில் மகிழ்ச்சி காண்பதைவிட நாங்கள் கொடுப்பதிலே அடுத்தவர் காண்கின்ற மகிழ்ச்சி தான் உண்மையான மகிழ்ச்சியாக அமைதல் வேண்டும்.


'உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக.உலகில் அவருக்கு உகந்தோர்க்கு அமைதி உண்டாகுக'– என்று வானதூதர் பாடினார்கள்.

அந்த அமைதியைப் பெற்றுக்கொள்ள நாங்கள் தகுதி உள்ளோராக இருக்கவேண்டும். எனவே, இந்தக் காலம் எல்லோருக்கும் மகிழ்ச்சியின் காலமாக சிறப்பான நன்மைத்தனங்களின் காலமாக அமைய நான் உங்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்துகின்றேன்.

கிறிஸ்து பிறப்புப் பெருவிழா வாழ்த்துகளை உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன். – இவ்வாறு ஆயர் நொயல் இம்மானுவேல் தெரிவித்துள்ளார்.

# நம்பிக்கையூட்டும் நத்தார் வாழ்த்து!

## செ.யோசப்பாலா



காரிருள் நடுவே கடுங்குளிர் மத்தியில் வயல் வெளியில் காவல்காத்த இடையர்களுக்கு ஓர் செய்தி. அஞ்சாதீர் உங்களுக்கோர் நற்செய்தி அறிவிக்கிறேன். உங்களுக்காக ஓர் மீட்பர் பிறந்துள்ளார். பெத்தலேகம என்னும் ஊரில் மாட்டுத்தொழுவத்தில் தீவனத் தொட்டியில் கிடப்பதை காண்பீர்கள் எனக் கூறிய செய்தியை கேட்டு பாமர மக்களான இடையர்கள் விரைந்தனர். கண்டனர். வாங்கினர். மக்களுக்கு பகிர்ந்தனர். இதுவே இன்று வரை 21 ஆம் ஆண்டுவரை கொண்டாடி மகிழும் நத்தார் விழாவாகும். இவ்வாறு தனது நத்தார் தின வாழ்த்தில் தெரிவித்துள்ளார் கத்தோலிக்க கலை இலக்கிய வட்ட செயலாளர் செ.யோசப்பாலா.

அவரது செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இனம், மதம், மொழி கடந்து உலகமே கொண்டாடி மகிழும் விழாவின் வடிவங்கள் மாறலாம் மகிழ்வூட்டும் விழாக்களில் அன்புப் பகிர்வுகள் உறவு, நட்பு, சந்திப்புக்கள், ஆலய தரிசிப்புக்கள் யாவும் அர்த்தமூட்டும் நம்பிக்கை விழாவாகப் பகிர்ந்து கொள்ளவும் பொறுப்புக்கள், கடமைகளை அன்று இடையர்கள் பகிர்ந்ததை இன்று பல விழிகளில் தொடரும் விழாவாகியது.

பாலன் இயேசுவின் பிறப்பு எம் பாலகக் குழந்தைகளின் மகிழ்வூட்டும் நம்பிக்கையூட்டும் நல்வழிகாட்டும் விழாவாக மாறினால் பாலக பருவம் பண்புள்ள குழந்தைகளில் பாலன் இயேசுவின் உருவத்தை நல்வழியில் வழிகாட்டும் சிறு சிறு செயல்களால் மகிழ்வூட்டி மகிழ்வோம்.

நம்பிக்கையூட்டும் நற்செயல்களால் நல்வாழ்த்துக்கள் கூறி மகிழ்வோம். – என்றுள்ளது.

# விண்ணிலிருந்து விடியல் நம்மைத்தேடி வரும்

## இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை வாழ்த்து



கொவிட் தொற்று நோயின் தாக்கம், அதிக மழை வீழ்ச்சியால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம், விலைவாசி உயர்வு, இரசாயனப் பசளைகளின் தட்டுப்பாடு என நமது வாழ்க்கை பெரும் சுமையாக மாறியுள்ள இத்தகையதொரு இக்கட்டான சூழ்நிலையில் இந்த கிறிஸ்மஸ் விழா நமக்கு நம்பிக்கையை வழங்குகின்றது என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கிறிஸ்மஸ் விழாவையொட்டி மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்தசெய்தியில்மேலும்குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

மீண்டுமொரு கிறிஸ்மஸ் விழாவை நாம் எதிர்நோக்கி இருக்கின்றோம். இன்றைய நமது நாட்டின் வாழ்க்கைச் சூழ்நிலை நம் எல்லோருக்கும் நம்பிக்கை அற்றதாக, கவலையளிப்பதாக இருக்கின்றது.

எத்தகைய சூழ்நிலையிலும் நாம் நம்பிக்கை இழக்காமல் வாழவேண்டும் என்பதையே இந்த விழா நமக்குச் சொல்லித் தருகின்றது.

கொவிட் தொற்று நோயின் தாக்கம், அதிக மழை வீழ்ச்சியால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம், விலைவாசி உயர்வு, இரசாயனப் பசளைகளின் தட்டுப்பாடு என நமது வாழ்க்கை பெரும் சுமையாக மாறியுள்ளது. இத்தகையதொரு இக்கட்டான சூழ்நிலையில் இந்த கிறிஸ்மஸ் விழா நமக்கு நம்பிக்கையை வழங்குகின்றது. ஆறுதலின் மகிழ்ச்சியின் செய்தியைத் தருகின்றது.

அதாவது நாம் நம்புகின்ற கடவுள் எங்கோ ஆகாய மேகங்களில் வாழ்கின்ற கடவுள் அல்லர். மாறாக, அவர் நம்மோடு வாழுகின்றார். 'வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடிகொண்டார்' என்ற இறைவாக்குக்கு ஒப்ப, இயேசுவின் பிரசன்னத்தை உடனிருப்பை ஆழமாக உணருகின்ற கிறிஸ்மஸ் விழாவை நாம் கொண்டாடுகின்றோம்.

இம்மானுவேல் என்று பெயர் பெற்ற பாலகன் இயேசு 'கடவுள் நம்மோடு இருக்கின்றார்' என்ற ஆறுதலின் செய்தியை தனது பிறப்பின் மூலம் மீளவும் இந்நாள்களில் வலியுறுத்துகின்றார்.

ஆகவே இயேசுவின் வருகை, அதாவது கிறிஸ்மஸ்விழாஎன்பதுநமக்குஆறுதலையும், மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் அருளுகின்ற ஒப்பற்ற விழாவாகும்.

விண்ணில் இருந்து விடியல் நம்மைத் தேடி வரும். இந்நாள்களில் நாம் நம்பிக்கையில் தளர்வுறாது தொடர்ந்து செயலாற்றுவோம். 'ஆண்டவரின் காலத்தில் நீதி தழைத்தோங்கும்' என்ற திருப்பாடல் ஆசிரியரின் நம்பிக்கையை நமதாக்குவோம்.

உங்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் ஒவ்வொருவரையும், உங்கள் குடும்பத்தையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பாராக என அந்த கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்த அரசு ஆட்சி தொடர்ந்து இருந்தால் மக்கள் பட்டினியால் சாகும் நிலை வரும்!

## ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் கருத்து

தற்போதைய அரசாங்கம் தொடர்ந்தும் ஆட்சியில் இருந்தால் மக்கள் பட்டினியால் சாகவேண்டி வரும் என ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் ரசிக்கா பிரியதர்சினி தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். வீட்டு சமையலறைப் பொருள்களில் இருந்து அனைத்துப் பொருள்களுக்கான விலையும் அதிகரித்துள்ளது.

கிராமங்களில் இருந்து பஸ்ஸில் பயணம் செய்வதற்குக் கூட மக்களுக்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பஸ் கட்டணங்களும் முன்னரை விட அதிகரித்துள்ளன.

முழு நாட்டுடன் ஒப்பிடுகின்ற போது வன்னி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். பல மக்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எங்களது மக்களின் வறுமையை ஒழிக்க வேண்டும். மக்களது பிரச்சினைகள் மற்றும் வறுமை தொடர்பில் தெரிந்த ஒருவர் நாட்டின் தலைவராக வேண்டும். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 3 வருடங்கள் ஆகின்ற போதும் இந்த மக்களின் வறுமையைக் கண் திறந்து பார்க்கவில்லை. இதனால் இந்த அரசாங்கத்தை நாம் மாற்ற வேண்டும். இந்த அரசாங்கம் தொடர்ந்தும் ஆட்சியில் இருந்தால் மக்கள் பட்டினியால் சாகவேண்டி வரும்.

இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் இணைந்து இந்த அரசாங்கத்தை மாற்ற வேண்டும். 69 லட்சம் மக்கள் வாக்களித்து தெரிவு செய்தமையால் இன்று அவர்கள் உட்பட அனைத்து மக்களும் கஷ்டப்படுகின்றார்கள்.

இந்த அரசாங்கத்தின் தலைவர்கள் நாடு நாடாகச் சென்று கொண்டு இருக்கிறார்கள். மக்களது பணத்தில் நாம் வெளிநாடுகளுக்கு செல்கின்றோம் என்கின்ற உணர்வு கூட அவர்களுக்கு ஏற்படவில்லை.



இதற்கு மக்கள் பதில் அளிக்க வேண்டும். மக்களது பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு தலைவரை மக்கள் தெரிவு செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.




## அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பை கண்டித்து நேற்றும் ஜே.வி.பியினரால் ஆர்ப்பாட்டம்

அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பைக் கண்டித்து மக்கள் விடுதலை முன்னணியினரால் நேற்றும் (வெள்ளிக்கிழமை) நாட்டின்சிலபிரதானநகரங்களில்போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பு, அத்தியாவசியப்பொருள்களின் விலை உயர்வு மற்றும் உரப் பிரச்சினை என்பனவற்றுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்படி, நேற்று பாணந்துறை, காலி, அக்குரஸ்ஸ, பதுளை, குருநாகல், சிலாபம், ரிக்கிலகஸ்கட, பூண்டுலோயா, கதுருஓயா மற்றும் திருகோணமலை முதலான பகுதிகளில் போராட்டம் நடத்தப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்க பிரதிநிதிகளும் இந்தப் போராட்டங்களில் இணைந்துகொண்டனர் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பு, விலைவாசி அதிகரிப்பால் அல்லலுறும் மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி மக்கள் விடுதலை முன்னணியால் நாட்டின் சில பகுதிகளில்வியாழக்கிழமையும்ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்மஸ் பண்டிகை; பாதுகாப்பு தீவிரம்

கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, நாட்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதற்காக நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் மேலதிக பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் இணைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் பேச்சாளர், பிரதி பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கிறிஸ்மஸ் பண்டிகையின்போது, தேவாலயங்களின் பாதுகாப்புக்காக விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## குடும்ப உறுப்பினர்களுடன் மட்டும் பண்டிகைகளை கொண்டாடுங்கள்!

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொரோனா வைரஸின் ஒமிக்ரோன் மாறுபாட்டின் பரவலைக் கருத்திற்கொண்டு, குடும்பஉறுப்பினர்களுடன் மட்டும் பண்டிகைகளைக் கொண்டாடுமாறு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, குடும்ப உறுப்பினர்களுடன் பார்ட்டிகள் மற்றும் ஒன்றுகூடல்களை மட்டுப்படுத்துமாறு அந்த அமைச்சு மக்களை வலியுறுத்தியுள்ளது.

அத்தகைய விருந்துகளும் சுகாதார வழிகாட்டுதல்களைக் கடுமையாகப் பின்பற்றி நடத்தப்பட வேண்டும் என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் வைத்தியர் ரஞ்சித் பதுவன்துடாவ வலியுறுத்தினார்.

கொரோனாத் தடுப்பூசியின் பூஸ்டர் டோஸைப் பெறத் தகுதியுடையவர்கள் கூடிய விரைவில் அதனைப் பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பூஸ்டர் தடுப்பூசி மூலம் வழங்கப்படும் நோய் எதிர்ப்பு சக்தி மரணங்களைத் தடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மீனவருக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் கடற்றொழில் அமைச்சருக்கு எதிராகப் போராட்டம் வெடிக்கும்!

### வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன் போர்க்கொடி

வடக்கு மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடற்றொழில் அமைச்சர் தகுந்த நடவடிக்கை எடுப்பாராக இருந்தால் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கத்தயார் எனதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

ஆனால்மீனவர்களுக்குவழங்கியவாக்குறுதிகளை பொய்யாகவோ அல்லது நிறைவேற்றா விட்டாலோ நாங்கள் கடற்றொழில் அமைச்சருக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலை வரும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட மீனவர்களால் நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

யாழ். மாவட்ட மீனவர்களால் பெருமெடுப்பில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கடற்றொழில் அமைச்சர் நேரடியாக வருகை தந்து சில உறுதிமொழிகளை அளித்து இந்தப் போராட்டத்தை நிறுத்தியுள்ளார். அதனை நாங்கள் வரவேற்கின்றோம். மீனவர்களுக்கு அவர் அளித்த வாக்குறுதிகளை கடற்றொழில் அமைச்சர் நிறைவேற்ற வேண்டும் அதற்கு நாமும் ஒத்துழைப்பு வழங்கத் தயார். ஆனால் மீனவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை பொய்யாகவோ அல்லது நிறைவேற்றா விட்டாலோ நாங்கள் கடற்றொழில் அமைச்சருக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலை வரும். – என மேலும் தெரிவித்துள்ளார்.

## கல்கிசையில் இருந்து காங்கேயனுக்கு புதிய ரயில்

கல்கிசையில் இருந்து காங்கேசன்துறை வரை நகரங்களுக்கு இடையிலான புதிய ரயில் ஒன்றை சேவையில் ஈடுபடுத்த ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எஸ்13 என்ஜினைக் கொண்ட இந்த ரயில் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

23 ஆம் திகதி மருதானையில் இருந்து ரம்புக்கணை நோக்கி 550 பயணிகளுடன் இந்த ரயில் சென்றது.

550 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய இந்த ரயில் போக்குவரத்து பரிசோதனைக்காக மருதானை ரயில் நிலையத்திலிருந்து ரம்புக்கணை ரயில் நிலையம் வரை பயணித்துள்ளது.

இந்த ரயிலின் சில பெட்டிகள் குளிரூட்டப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.12.2021இல் வெளியிடப்பெற்றது.